<u>பத்திரிக்கை செய்தி</u>

<u>லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர் அவர்களுக்கு தண்டனை விதித்து தீர்ப்பு</u>

திரு.ஜெயச்சந்திரன், மேலாளர், ராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட், திருவாடானை, ராமநாதபுரம் மாவட்டம் என்பவர் தன்னுடைய கட்டுபாட்டில் உள்ள ராம்கோ நியாய விலைக்கடை, பாண்டுக்குடி, ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2004ம் வருடம், புகார்தாரர் திரு.சுந்தரராஜ், உதவி விற்பனையாளர், என்பவரிடம் மாதாந்திர மாமூலாக ரூ.1,000/- கையூட்டு பெற்றமைக்காக ராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கானது ராமநாதபுரம் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையில் இன்று 20.07.2023 குற்றம் நிருபணம் ஆனதால் திரு.ஜெயச்சந்திரன், மேலாளர் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையும் மற்றும் ரூ.2,000/- அபராதமாக விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.